**தலைப்பு 124 – ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 இலக்கங் கொண்ட பொதுநிதிச் சுற்றிக்கையின் ஏற்பாடுகளின் படி தயாரிக்கப்பட்டு அந் திக் கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கும் கருத்துடன் அன்றி சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெரிந்துகொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயமத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அதிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவுகள் ரூபா 349,513 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 திகதிய 271/2019 இலக்கங் கொண்ட அரச கணக்குத் திணைக்களத் தின் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடு களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சு ஆண்டின் போது பல தடவைகள் நிறுவன அமைப்பின் மாற்றங்கள் ஏற்பட்ட காரணத் தினால் கணக்கு அலுவல்களில் ஒன்றிணைக்க நேரிட்டிருந்த மையால் உரிய தகவல்கள் சேகரிப்பதில் காணப்பட்ட வசதியீனங்கள் இணக்கஞ் செய்வதற்காக காலம் போதாமை ஆகிய காரணங்களினால் இந்த வழு ஏற்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்பட்டிருந்த மூலதனச் செலவுகள் திறைசேரி அச்சுப் பிரதியின் படி மூலதனச் செலவுகளை விட ரூபா 488,240,943 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | பின்பக்க பெறுமதிகளின் கூட்டுத் தொகையை அடுத்த பக்கத்துக்கு கொண்டுவரும் போது ஏற்பட்டிருந்த தவறு ஒன்று என காணப்பட்டதுடன் கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டியுள்ள பதிவு சரியானதாகும். |
| (இ) | நிதி செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்பட்டுள்ள 2019 வைப்புக் கணக்கு தொடர்பான கூற்றில் அமைச்சின் வைப்புக் கணக்கு மீதி ரூபா 58,304,665 தொகையாக காணப்பட்டதுடன், திறைசேரி ஏடுகளின் படி அந்த மீதி ரூபா 58,254,934 தொகையாக இருந்தமையால் அக் கணக்குகள் இடையே ரூபா 49,731 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | ஆரம்ப கைத்தொழில் பிரிவில் 2019 மே மாதம் பொது வைப்புக் கணக்கில் பெறுவனவுகள் என கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 49,731.07 தொகை CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் குறிப்பிட்ட மாதத்திற்கான பெறுவனவுகள் என கணக்கீடு செய்யப்படாமல் ஆரம்ப மீதியுடன் உட்படுத்தப்பட்டிருந்தமையால் திணைக்கள ஏடுகள் மற்றும் திறைசேரி கணக்கு இடையே வருட இறுதி மீதியில் ரூபா 49,731.07 வித்தியாசம் ஒன்று ஏற்பட்டிருந்தது. |
| (ஈ) | 2019 திசெம்பர் 03 திகதிய அரச கணக்குச் சுற்றறிக்கை இலக்கம் 271/2019 இல் 7(vi) படி கட்டுநிதி சீராக்கல் கணக்கு ஒன்று தயாரித்திருக்கவில்லை. | - மேற்படி - | 2019 ஆண்டில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டு கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரித்து பிரதி ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 982,563,593 தொகையான மீதி மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 1,102,609,470 தொகை என திருத்தப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 120,045,877 தொகை மிகையாகக் காட்டப் பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 திகதிய 271/2019 இலக்க அரச கணக்குத் திணைக்களத்தின் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று தயாரிக்கும் போது இந்த அமைச்சின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு மேலதிகமாக ஆரம்ப கைத்தொழில் பிரிவின் நிலையான சொத்துப் பதிவேடும் கவனத்தில் எடுக்கப்பட்ட காரணத்தினால் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) நிதி நிலைமை தொடர்பான கூற்றில் தேறிய சொத்துக்கள்/ குவியல் கீழ் ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகளின் பெறுமதி ரூபா 1,023,038,293 தொகை ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணத் தேக்கம் என காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அத் தேக்கம் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மேற்படி - | ஆதனங்கள் பொறித்தொகுதி கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிக்கு சமமான பெறுமதி ஒன்று ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரண தேக்கம் என காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் தவறுதலின் காரணமாக அப் பெறுமதி தேறிய சொத்துக் களின் கீழ் உட்பட்டிருந்தது. |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது அமைச்சினால் ஆண்டின் போது காசின் மூலம் மேற் கொள்ளப்பட்ட செலவுகள் உட்படுத்திய நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் உட்படுத்தப்பட்டிருக்காததுடன், திறைசேரி கூற்றின் படி ஏனைய திணைக்களங்களினால் மேற் கொள்ளப்பட்ட செலவுகளும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 03 திகதிய 271/2019 இலக்கங் கொண்ட அரச கணக்குத் திணைக்கள சுற்றறிக்கையில் காட்டப் பட்டள்ள ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | இவ்வமைச்சு 2019 முதல் 4 மாதங்களில் கைத்தொழில், தொழிற்சங்க தொடர்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் மூலம் நேரடியாக 193 செலவுத் தலைப்பின் கீழ் திறைசேரிக்கு கணக்கு விவரங்கள் அனுப்பப் பட்டிருந்தன. அதன் பின்னர் மே முதல் திசெம்பர் வரை ஆரம்ப கைத்தொழில் அமைச்சு மற்றும் இந்த அமைச்சு இணைக்கப் பட்டதால் 124 செலவுத் தலைப்பின் கீழ் திறைசேரிக்கு செலவுகள் அனுப்பபட்டிருந்தன. பின்னர் கணக்குகளில் ஏற்பட்டிருந்த வழுக்கள் அனைத்தும் வருட இறுதியில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அந்த சீராக்கல் குறிப்புக்கள் மீது காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது சில தவறுகள் நேரிட்டிருந்தன. |

## 2 நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டின் போது திட்டமிட்டிருந்த வாறு 04 செலவு விடயங்களுக்காக திறைசேரியினால் கட்டுநிதிகள் வழங்கப்படாமையால் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப் பட்டிருந்த ரூபா 1,778,926,657 தொகைக்கான ஏற்பாடுகளை பயன்படுத்த முடியாமல் இருந்தது. | திட்டங்களுக்கு இணங்கக் கூடிய விதமாக செலவு விடயங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். | இணங்குகின்றேன். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 50 (ஆ) பிரகாரம் வருடாந்த மதிப்பீடு கூடிய அளவு முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்ட போதிலும், அமைச்சு 93 செலவு விடயங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6,319,672,000 தொகைக்கான ஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 100 சதவீதத்துக்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்ட சேமிப்பு ரூபா 2,278,724,285 தொகையாக காணப்பட்டதுடன், அவை மதிப்பீட்டு ஏற்பாடுகளில் 36 சதவீதமாக காணப்பட்டது. | நிதிப் பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | அரசு நிதி வருடம் ஒன்றிற்காக திட்டமிட்டிருந்த போதிலும் 3 வர்த்தமானி அறிவித்தலின் மூலம் (01/2019,03/2019,09/2019) அரச நிர்வாக பொறிமுறை 3 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டி ருந்ததுடன் அதன் படி செலவு முகாமைத்துவம் தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடியாமல் இருந்தது. மேலும் திறைசேரி யினால் 2 சந்தர்ப்பங்களில் செலவுகளை வரையறுக்கும் சுற்றறிக்கைகள் (04/2016(ii), 07/2019) வெளியிடுவதும் ஏற்பாடுகள் சேமிப்பதற்கு காரணமாக இருந்ததென இருந்ததென காட்டப்பட்டிருந்தது. |
| (இ) | மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக 06 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 03 மூலதன செலவு விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. அவ்வாறு ஒன்பது சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டிருந்த தொகையில் 100 சதவீதம் அதாவது ரூபா 63,265,670 இற்கான சேமிப்புக் காணப்பட்டது. | மாற்றப்பட்ட பணம் குறிப்பிட்ட குறிக்கோளுக்காக செலவிடப்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது அங்கீகரிக் கப்பட்டிருந்த மதிப்பீட்டில் அமைச்சினை செயற்படுத்தும் போது அமைச்சின் குறிக்கோள்கள் திருத்தப்பட்டு மூலம் வேறு அமைச்சுக்களுடன் மூன்று சந்தர்ப்பங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன. ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் திருத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் செலவுகள் மேற்கொள்வதற்கு போதியளவாக காணப்படாத போது சேமிப்புகள் காணப்பட்ட தலைப்புகளின் ஏற்பாடுகள் மாற்றப்பட்ட போதிலும் மீண்டும் |

| | | |
|---|---|---|
| | | மீண்டும் அமைச்சுக்களின் குறிக்கோள்கள் மாற்றமடைந்ததனால் செலவுகள் மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காமையினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. மேலும் திறைசேரி சுற்றறிக்கையின் மூலம் செலவுகள் வரையறுக்கப்படல் மற்றும் கட்டுநிதி கிடைக்காமையும் ஏற்பாடுகள் சேமிப்புக்கு காரணமாக இருந்தது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாமல் கைவிடப்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப கைத்தொழில் அமைச்சினால் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மழைவீழ்ச்சியை அதிகரிக்கும் இயலுமையை கண்டறிவதற்காக சீனாவின் வானிலை சேவை தொடர்பான கல்லூரியின் விஞ்ஞானி ஒருவர் மற்றும் ஹைகென் வானிலை புதுப்பிப்பு நிலையத்தின் விஷேடத்துவர் ஒருவர் 2018 இல் இந்த நாட்டுக்கு அழைப்பதற்காக ரூபா 1,398,448 தொகை செலவிடப்பட்டு அதற்கான அறிக்கை அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. அமைச்சரவையினால் இது தொடர்பாக மின்வலு மற்றும் மீள்புத்தாக்க அமைச்சுடன் கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளும் படி செயலாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.<br>அதனிடையே மீளாய்வாண்டின் போது மீண்டும் சீனாவில் இருந்து 07 உத்தியோகத்தர்கள் அழைத்து வரப்பட்டு அதற்காக ரூபா 2,113,560 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அச் செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரவை தீர்மானத்தின் படி செயற்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) அமைச்சின் ஏற்பாடுகள் மீது பொரலந்த கால்நடை அபிவிருத்தி செய்யும் விஷேட செயற்திட்டம் ஒன்று 2016 ஆம் ஆண்டு முதல் 2019 வரையான முன்வரும் 03 ஆண்டுகளுக்காக ரூபா 2,025,900,000 ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு அளவில் பசுக்கள் கொள்வனவு செய்வதற்காக, பண்ணை வளவில் புற்கள் பயிர்செய்தல் மற்றும் புற்பயிர்சைக்காக 10 ஏக்கர்களில் நீர் குழாய் முறைமை ஒன்று நிறுவுவதற்காக மற்றும் பண்ணை வளவில் மண் ஆய்விற்காக ரூபா 55,484,214 தொகை செலவிடப்பட்டிருந்தது. பண்ணையின் மண் படையின் சீரற்ற நிலைமையின் காரணமாக இந்த செயற்திட்டம் செயற்படுத்த முடியாமல் இருந்தது. | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | போக்குவரத்தில் ஏற்பட்ட சில சிக்கல் நிலைமைகள் மற்றும் பண்ணையில் காணப்பட்ட சுத்தமற்ற தன்மைகள் காரணமாக கிருமிகள் உடம்பில் சென்றதனால் கால்நடைகள் இறக்க நேரிட்டிருந்தது. அதே போல் உயர்தர பசுக்கன்றுகள் பிரதேசத்தில் வசிக்கும் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

**3.2 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றம் ஒன்றை பெற்றிருக்காத செயற்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப கைத்தொழில் அமைச்சி னால் மிகை விவசாய வலயங்கள் நிறுவுவதற்காக 2016 ஆண்டின் போது பெந்தொட்ட தோட்டத் தொகுதியில் மஹ ஹீன்தென்ன காணியில் 64 ஏக்கர்கள் ரூபா 108,780,000 தொகை செலுத்தப்பட்டு 2018 ஆண்டின் போது காணியை உரித்தாக்குவதற்காக அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரித்தாக்கும் நடவடிக்கைகள் நடைபெற்றிருக்காத துடன் எதிர்காலத்தில் உரித்தாக்கும் அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 26 திகதி மேற்கொள்ளப்பட்ட தரைப் பரிசோதனையின் போது 64 ஏக்கர் காணியும் முற்றாக காடுகள் வளர்ந்து காணப்பட்டது. அதன்படி இந்த செயற்திட்டம் செயற்படுத்தப் பட்டிருக்காததுடன் அதற்காக செலவிடப்பட்டிருந்த பணம் விளைவற்ற செலவொன்றாக மாறியுள்ளது. | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப் பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆகஸ்ட் 01 திகதி காப்புறுதி உள்ளடக்கம் முடிவடைந்திருந்த வாகனம் ஒன்று 2018 ஆகஸ்ட் 24 திகதி விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் விபத்தின் மூலம் வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 6,783,254 தொகையென அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த விசாரணை அறிக்கையின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த விபத்து தொடர்பாக நி.பி. 104 (1)(அ) பிரகாரம் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த விசாரணை அறிக்கையின் படி வானத்திற்கான நட்டம், வாகனத்தை பயன்படுத்திய உத்தியோகத்தரிடம் மற்றும் சாரதியிடம் அறவிடப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலும், பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துதல் தொடர்பாக அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் போக்குவரத்து விடயத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் வாகனத்தை ஒப்படைக்கும் போது கவனயீனமாக செயற்பட்டிருந்தார் என குறிப்பிடப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஏற்பட்டிருந்த நட்டத்தை 2020 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 104 இன் பிரகாரம் செயற்பட்டு நட்டத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராம அபிவிருத்தி ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பொரளை பிரதான பயிற்சி நிறுவன விடுதி முற்றாக பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படாததுடன் விடுதியின் 02 ஆம் இலக்க சொற்பொழிவு அரங்கம் மற்றும் நிறுவனத்தின் வளவு திருத்த வேலைக்காக ரூபா 6,789,461 இற்கான தொகையொன்று கொழும்பு பிரதேச செயலகத் தினால் கடந்த ஆண்டு ஒக்தோபர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதே போல் மீளாய்வாண்டின் போதிலும் இவ்விடயத்திற்காக ரூபா 7,200,000 தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2020 நவம்பர் 31 திகதி வரை அவ் விடயங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | திருத்த வேலைகள் குறிப்பிட்ட காலத்தில் மேற்கொண்டு விடுதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சில் பொறியியல் உத்தியோகத்தர்கள் இன்மையால் பிரதேச செயலகம் ஊடாக கட்டிடத்தின் திருத்த வேலைகள் மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகங்களில் அலுவல்கள் மிகையாக இருந்ததனால் குறிப்பிட்ட திருத்த வேலைகளை ஆரம்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டது. எனினும் விடுதியின் திருத்த வேலைகள் கணக்காய்வு திகதிக்கு பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | விடுதியின் மற்றும் சமையலறை தேவைகளுக்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 3,385,762 இற்கான உபகரணங்கள் விடுதி திருத்தவேலை தாமதம் அடைந்த காரணத்தினால் சுமார் 3 வருட காலம் கலஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதே போல் இந்த மின்சார உபகரணங் களுக்காக வழங்கப்பட்டிருந்த உத்தரவாத காலம் குறிப்பிட்ட உபகரணங்களை பயன்படுத்து வதற்கு முன்னர் காலவதியாகியிருந்தன என அவதானிக்கப்பட்டது. | தேவையின் படி கொள்வனவு செய்தலும் உரிய நேரத்தில் வினியோகித்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும். | திருத்த வேலைகள் முடிந்தவுடன் அவ் உபகரணங்களை சமயலறையில் பொருத்தப்படும். |

**3.5 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 70 வருடங்களை மிகைத்துள்ள குறைந்த வருமானம் உடைய முதியோருக்காக ரூபா 2,000 மாதாந்த கொடுப்பனவு ஒன்று வழங்குவதற்காக முதியோர் 416,667 பேருக்காக 25 மாவட்டங்களுக்கு ரூபா 10,000,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டி ருந்தது. மீளாய்வாண்டின் போது 410,647 முதியோருக்காக ரூபா 9,855,532,716 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் படி அங்கீகரிக்கப்பட்டிருந்த 6,020 பேருக்கு கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தகைமைகளை பூர்த்தி செய்துள்ள கூடிய அளவினதான முதியோர்களுக்கு படிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்காக சில கொடுப்பனவு பெறுவோரினால் குறிப்பிட்ட மாதங்களில் பணம் பெற்றுக்கொள் ளாமை, படிகள் பெற்றுக் கொள்வோரின் வதிவிடங் கள் மாற்றடைதல் மற்றும் நலன்பெறுவோர் இறத்தல் ஆகியன காரணமாக இருந்துள்ளது. |
| (ஆ) | அனைத்து பிரதேச செயலகங்களும் முதியோர் கொடுப்பனவு செலுத்திய பின்னர் பொழிப்பு செலவு அறிக்கை ஒன்று ஒவ்வொரு மாதம் முடிவடைந்து தொடர்ந்து வரும் மாதத்தின் 15 திகதிக்கு முன்னர் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். அதே போல் மாவட்ட செயலகத்தினால் அனைத்து பிரதேச செயலகங்களினாலும் அனுப்பப்படும் அறிக்கைகளில் இருந்து பொழிப்பு அறிக்கை ஒன்று தயாரித்து தொடர்ந்துவரும் மாதத்திற்கு 30 திகதிக்கு முன்னர் தேசிய முதியோர் செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இது தொடர்பாக அமைச்சினால் 2018 ஒக்தோபர் 15 திகதி என்எஸ்ஈ/ ஈஎல்/01/2018 சுற்றறிக்கையின் மூலம் காட்டப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட அறிக்கையில் தாமத நிலைமை ஒன்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. அதன்படி முதியோர் கொடுப்பனவிற்கு உரிமையுடைய ஆனால் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளாத நபர்கள் தொடர்பான 25 மாவட்டங்களில் 11 | ஏற்பாடுகளை உச்ச மட்டத்தில் பயன்படுத்தலூடாக முதியோர்களுக்கு சலுவை வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொழிப்பு செலவு அறிக்கைகள் வழங்கி இருக்காத மாவட்ட செயலக உத்தியோகத்தர் களுக்கு அறிவித்துள்ள துடன் எதிர்காலத்தில் உரிய முறையில் செலவுப் பொழிப்பு அறிக்கை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்டங் களில் இருந்து மாத்திரம் பொழிப்பு அறிக்கை கிடைத்திருக்கவில்லை. அத்துடன் கொடுப்பனவு பெற்றுக் கொள்வதற்காக காத்திருக்கும் பதிவேட்டில் காணப்படும் எண்ணிக்கை 157,720 ஆகும். | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது ஊனமுற்ற நபர்கள் 72,000 பேருக்காக ரூபா 5,000 தொகைக்கான ஊனமுற்றோர் கொடுப்பனவு செலுத்துவதற்காக ரூபா 4,320,000,000 மதிப்பீடு செய்யப் பட்டிருந்த போதிலும் ஜனவரி மாதம் முதல் அக் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆண்டின் முதலாவது 04 மாதங்களுக்குள் 32,000 ஊனமுற்றோருக்கு ரூபா 3,000 தொகையும், அடுத்த 2 மாதங்களுக்குள் ரூபா 5,000 தொகையும், இறுதி 6 மாதங்களுக்காக 72,000 ஊனமுற்றோர்களுக்கு ரூபா 5,000 வீதம் 25 மாவட்டங் களுக்காக ரூபா 2,864,000,000 தொகை ஒதுக்கப்பட்டு ரூபா 2,810,301,645 தொகை ஊனமுற்றோர் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி காத்திருக்கும் பதிவேடு தொடர்பாக கவனம் செலுத்தாமை யினால் ரூபா 53,698,355 தொகை மீதியாக இருந்தது. | ஏற்பாடுகளை உச்ச மட்டத்தில் பயன்படுத்தலூடாக ஊனமுற்றோருக்கு சலுவை கொடுப்பனவு வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் வரை இடைக்கால அங்கீகாரக் கணக்கின் மூலம் அந் 04 மாதங்களுக்காக ரூபா 1,440 மில்லியன் தொகை கிடைத்திருந்தது. இந்தக் கொடுப்பனவு ரூபா 3,000 முதல் ரூபா 5,000 வரை அதிகரிக்கப்பட்டு ள்ளதுடன் காத்திருக்கும் பதிவேட்டிலுள்ள எண்ணிக்கை 40,000 உட்பட 72,000 பேருக்காக ஏற்பாடுகள் கிடைத்திருந்த துடன் ஊனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் 4 மாதங்கள் கடந்த பின்னரே இது தொடர்பாக அறிந்திருந்தது. அதன் காரணமாக மே மாதம் முதல் ரூபா 5,000 தொகை 32,000 ஊனமுற்றோருக்கு மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தமை யால் இத்தொகை சேமிக்கப்பட்டிருந்தது. 72,000 நலன்பெறுவோரு க்கு ஜூலை 01 முதல் ரூபா 5,000 வீதம் செலுத்தும் படி திறைசேரி பிரதிச் செயலாளர் 2019 ஜூலை 11 திகதி கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கி இருந்தது. |
| (ஈ) | மீளாய்வாண்டு முதலாவது 04 மாதங்களில் 32,000 ஊனமுற்ற நபர்களுக்காக ரூபா 5,000 தொகை செலுத்தப்படாமை ஜனவரி மாதம் முதல் 72,000 ஊனமுற்ற நபர்களுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நபர்களுக்கு ரூபா 5,000 தொகை | ஏற்பாடுகளை உச்ச மட்டத்தில் பயன்படுத்தலூடாக ஊனமுற்றோருக்கு சலுவை வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதியாகவுள்ள ஏற்பாடு களில் நிலுவைக் கொடுப்பனவு (2019 ஜனவரி முதல் ஏப்ரல் வரை) கொடுப்பனவு செய்ய முயற்சி எடுத்த போதிலும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வீதம் கொடுப்பனவு செய்வதற்கு ஆரம்பிக்கப்படாமை யால் மொத்த ஊனமுற்றோர் கொடுப்பனவில் ரூபா 1,509,698,355 தொகை அதாவது 35 சதவீதம் திசெம்பர் 31 திகதியளவில் மீதியாக காணப்பட்டது. | | ஏற்பாடுகள் ஒதுக்கப் பட்டிருந்த முறை தொடர்பாக முன்னர் அறிந்திருக்காமையால் ஏற்பாடுகள் சேமிக்கப் பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படாமல் இருப்பதற்காக உரிய உத்தியோகத்தர் களை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது சிறுநீரக நோயாளிகளுக்கு கொடுப்பனவு வழங்கு வதற்காக 24,666 நபர்களுக்காக ரூபா 1,479,985,000 தொகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 24,188 நபர்களுக்காக ரூபா 1,451,305,400 தொகை வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 28,679,600 தொகை மீதியாக காணப்பட்ட போதிலும் அந்த 11 மாவட்டங்களில் சிறுநீரகம் பாதிப்படைந்த நபர்களில் 6,179 போர் நபர்கள் காத்திருக்கும் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்தனர். | ஏற்பாடுகளை உச்ச மட்டத்தில் பயன்படுத்தலூடாக நோயாளிகளுக்கு சலுவை வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீளாய்வாண்டின் போது 11 மாவட்டங்களில் ஏற்பாடுகள் அனுப்பப்பட்ட 24,666 பேருக்கு மேலதிக மாக காத்திருக்கும் பதிவேட்டில் காணப்பட்ட தொகையினரும் பிரதேச செயலக மட்டத்தில் நலன்கள் எதிர்பார்போர் காணப்பட்டனர். தொடர்ந்து கொடுப்பனவு செய்யப்பட்டு வந்த 24,666 பேருக்காக ரூபா 1,479,985,000 மாவட்ட செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 25 மாவட்டங்களில் இனங்கண்டி ருந்த சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை 13,863 தொகையாக காத்திருக்கும் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்தம் கொடுப்பனவு பெற்றுக் கொள்ளும் 11 மாவட்டங்களுக் காக மேலதிகமாக ஏனைய மாவட்டங்களில் சிறுநீரக நோயாளிகளுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் 14 மாவட்டங்களில் 7,684 சிறுநீரக நோயாளிகள் முற்றாக கொடுப்பனவு பெற்றுக் கொள்வதிலிருந்த தவிர்ந்து காணப்பட்டனர். | அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கக் கூடிய விதமாக நோயாளிகளுக்கு சலுவை வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து மாவட்டங் களையும் உள்ளடக்கக் கூடிய விதமாக ரூபா 5,000 ஜீவனோபாய கொடுப்பனவு செய்வதற்காக 2020 செப்தெம்பர் மாதம் முதல் செலுத்துவதற்கான அங்கீகாரம் கிடைத்திருந்ததென அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (எ) | அமைச்சுக்குச் சொந்தமான 03 வாகனங்களின் திருத்த வேலைக் காக முகவர் நிலையங்களுக்கு வழங்கப்பட்டு 01 க்கும் 05 இடைப்பட்ட வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த வாகனங்களின் திருத்த வேலைகள் மேற்கொண்டு அமைச்சுக்கு பெற்றுக் | வாகனங்களை உரிய காலத்தில் திருத்த வேலை மேற்கொள் வதற்கும் மற்றும் அப்புறப்படுத்த வேண்டிய வாகனங்களை தாமதமின்றி அப்புறப் | கருத்துத் தெரிவிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அமைச்சுக்கு சொந்தமான ஓட்ட நிலையில் காணப்படாத 05 வாகனங்களை அப்புறப்படுத்து வதற்காக நடவடிக்கை எடுக்காமல் 02 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் அமைச்சு வளவில் நிறுத்தப்பட்டு காணப்பட்டது. | படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொரள்ள கிராம அபிவிருத்தி ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் பதவி 2018 ஆகஸ்ட் மாதம் முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும் அந்த நிறுவனத்தின் பிரதி/ உதவி 02 பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைக்கு புறம்பாக பிரதிப் பணிப்பாளர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். இதன் காரணமாக நிறுவனத்தின் கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதில் சிக்கல் நிலைமை ஒன்று காணப்பட்டது. | நிறுவனத்தின் கடமைகளை நடாத்திச் செல்வதற்காக நிரந்தர பணிப்பாளர் ஒருவருடன் தேவையான பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். | வெற்றிடமாக காணப்படும் பதவிகளை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கும் படி அரச சேவை மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |